1980 ஆகஸ்ட் 5]

தாமிரவருணி நதியிலிருந்து பாசன வசதி அளிக்கும் திட்டம்.

*வினா எண் 105—திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் தாமிரவருணி நதியின் தொடர்பு கோடகன் வாய்க்கால் மூலம் கங்கைகொண்டான் மற்றும் குளங்களுக்கு தண்ணீர் கொண்டு வந்து பாசனவசதி அளிக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இத் திட்டம் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது பல ஆண்டு காலமாகக் கூறப்படுகிற திட்டமாகும். இத் திட்டத்தின்மூலம், ஆலங்குளம், ஒட்டப்பிடாரம், திருநெல்வேலி ஆகிய 3 தொகுதிகள் பயன்பெறும் என்பதாலே நடப்பு ஆண்டிலேயே இத்திட்டத்தினை அரசு செயல்படுத்துமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, தலைமைப் பொறியாளரின் ஆய்வில் இருக்கிறது. விரைவிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, திருநெல்வேலியிலுள்ள தாமிரபரணி தொடர்புள்ள பல கால்வாய்களுக்கு முறையாக தண்ணீர் விடாத காரணத்தாலே, தண்ணீர் போதாத அடிப்படையிலே, இந்த ஆண்டு, இந்தப் பருவத்தில், கிட்டதட்ட 50,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களிலுள்ள பயிர்கள் தீய்ந்து கருகியுள்ளது பற்றி அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா ? அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இந்தப் பிரச்னைபற்றி அரசுக்கு முழுமையாகத் தகவல் வரவில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்னை அவைக் குறிப்பிலே இருக்க வேண்டுமா என்று தாங்கள் தயவுசெய்து தீர்மானிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : குறிப்பிலே இருக்கட்டும். வேண்டுமென்றால், அமைச்சர் நோட்டீஸ் கேட்கவேண்டும்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : 50,000 ஏக்கரிலே பயிர் நிச்சயமாகத் தீய்ந்து விடவில்லை. அதீதமாக ஒரு கருத்தைப் பரவவிடுவது நல்லதல்ல என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : குறிப்பேட்டிலே இருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அப்படி எல்லோருமே வேறு விதமான கேள்விகளைக் கேட்க அனுமதிக்கப்படுமேயானால், கருத்துக்கள் சரியாக இருக்காது. தாமிரபரணி நெல்லை மாவட்டத்திலேயே தொடங்கி, நெல்லை மாவட்டத்திலேயே முடிகிறது. ஆனால், இவர் எந்தக் குறிப்பிட்ட . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 50,000 ஏக்கர்கள் தீய்ந்து கொண்டிருக்கின்றன என்றால், பொதுமக்கள் அனைவரும் இங்கே வந்திப்பார்கள். இன்னும் வரவில்லை. ஆகவே, பிரச்சினை இல்லை. இதற்குத் தனிக் கேள்வி போடுங்கள். அவைக் குறிப்பில் இருப்பதால் பாதகம் ஒன்றும் இல்லை.

கீழ்க்கோம்பைத் திட்டம்.

* வினா எண் 106—திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் கீழ்க்கோம்பைத் திட்டம் நிறைவேற்றும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) 'கீழ்க் கொம்பைத்திட்டம்' எனப்படும் திட்டம் பரிசீலனையில் இல்லை. எனினும் திண்டுக்கல் வட்டம் காடல்வாவி என்னும் கிராமத்தில் சின்னக்கோம்பை யாற்றில் கண்மாய் அமைக்கும் திட்டம் தலைமைப் பொறியாளரின் (சிறு பாசனம்) ஆய்வில் உள்ளது.